# சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் (IMEI) சரிபார்ப்பு அமைப்பை மேம்படுத்தும் திட்டம் - TRCSL

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு விற்பனையாளர்களுக்கான பயிற்சி கையேடு

**உள்ளடக்க அட்டவணை**

அறிமுகம் ..... 4
TRCSL விற்பனையாளர் இணையதளத்தை அணுகுதல் ..... 4
விற்பனையாளர் பதிவு செயல்முறை ..... 5
இணையதளத்தில் உள்நுழைதல் ..... 8
விற்பனையாளர் முகப்பு பலகை கண்ணோட்டம் ..... 9
விற்பனையாளர் உரிமத்திற்கான விண்ணப்பம் ..... 10
மாதிரி அங்கீகார செயல்முறை ..... 20
இறக்குமதி அனுமதி (ICL)..... 34
சுங்க அனுமதி (CCL) செயல்முறை ..... 40
மறு- ஏற்றுமதி விண்ணப்ப செயல்முறை ..... 50

## 1. அறிமுகம்

இக் கையேடு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (TRCSL) இணையவழி தளத்தில் விற்பனையாளர்கள் தங்களது கணக்குகளைப் பதிவு செய்து நிர்வகித்தல், விற்பனையாளர் உரிமங்களுக்கு விண்ணப்பித்தல் மற்றும் விண்ணப்பங்களின் நிலையை கண்காணித்தல் ஆகிய அத்தியாவசிய செயல்முறைகளுக்கு வழிகாட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விற்பனையாளர்கள் தங்களது செயல்பாடுகள் முழுவதும் TRCSL விதிமுறைகளுக்கு முழுமையான இணக்கத்தை உறுதிசெய்ய வேண்டும். இதில், சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் (IMEI) பதிவு செய்யப்பட்ட சாதனங்களை மட்டுமே கொள்வனவு செய்து அவற்றுடன் பரிவர்த்தனை செய்வது ஒரு முக்கிய நடைமுறையாகும். இதன் மூலம், அனைத்து தொலைத்தொடர்பு சாதனங்களும் பாதுகாப்பு மற்றும் வலையமைப்பின் ஒருமைப்பாட்டிற்கான தேசிய விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்ய முடியும்.

இப் பயிற்சிக் கையேடு, TRCSL விற்பனையாளர் இணையவழித் தளத்தைப் பயன்படுத்தி, மேற்கண்ட தேவைகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கும், TRCSL உடனான வணிகச் செயல்பாடுகளைச் சீராக மேற்கொள்வதற்கும் படிப்படியான வழிகாட்டுதல்களை வழங்க உதவும்.

## 2. TRCSL விற்பனையாளர் இணையதளத்தை அணுகுதல்

- உங்களுக்கு விருப்பமான இணைய உலாவியைத் திறக்கவும். (சிறந்த பயன்பாட்டு அனுபவத்திற்காக Google Chrome பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.)
- TRCSL விற்பனையாளர் இணையவழித் தளத்தின் URL- க்கு செல்லவும் : https://ecs.trc.gov.lk/login

கீழே காட்டப்பட்டுள்ளவாறு உள்நுழைவு பக்கம் தோன்றும்.



## 3. விற்பனையாளர் பதிவு செயல்முறை

- புதிய பயனர்கள் உள்நுழைவதற்கு முன் ஒரு கணக்கை உருவாக்க வேண்டும்.

படிமுறை 1: கணக்கை உருவாக்கும் பகுதிக்குச் செல்லுதல்

- கீழே காட்டப்பட்டுள்ளவாறு, உள்நுழைவு படிவத்திற்கு அருகில் அமைந்துள்ள **"Create Account"** என்பதைக் கிளிக் செய்யவும்.




படிமுறை 2: விற்பனையாளர் பதிவு படிவத்தை நிரப்புதல்

- மின்னஞ்சல் **(Email):** உங்கள் செல்லுபடியாகும் மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும்.
- கடவுச்**சொல் (Password):** பாதுகாப்பான கடவுச்சொல்லை உள்ளிடவும்.
- கடவுச்சொல்லை மீண்டும் உள்ளிடுதல் **(Re-Enter Password):** கடவுச்சொல்லை மீண்டும் உள்ளிட்டு உறுதிப்படுத்தவும்.

நீல நிற **"Confirm Email"** பொத்தானைக் கிளிக் செய்யவும். இதன் மூலம் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு சரிபார்ப்புக் குறியீடு அனுப்பப்படும்.




படிமுறை 3: மின்னஞ்சல் சரிபார்த்தல்

- "மின்னஞ்சலை உறுதிப்படுத்தவும் - Confirm Email" என்பதைக் கிளிக் செய்த பின்னர், பச்சை நிற வெற்றிச் செய்தி ஒன்று தோன்றும்: "நீங்கள் வழங்கிய மின்னஞ்சல் முகவரிக்கு சரிபார்ப்புக் குறியீடு வெற்றிகரமாக அனுப்பப்பட்டுள்ளது. தயவுசெய்து உங்கள் மின்னஞ்சலைச் சரிபார்க்கவும்.."
- உங்கள் மின்னஞ்சலைச் சரிபார்க்கவும்: உங்கள் மின்னஞ்சலை திறந்து, TRCSL இலிருந்து வந்துள்ள மின்னஞ்சலைக் கண்டறியவும்.



படிமுறை 4: சரிபார்ப்புக் குறியீடு

- குறியீட்டை உள்ளிடுதல்: இணையவழித் தளத்திற்குத் திரும்பி, “உறுதிப்படுத்தல் குறியீடு - Confirmation Code” புலத்தில் 6 இலக்கக் குறியீட்டை உள்ளிடவும்.
- கணக்கை உருவாக்குதல்: நீல நிற “கணக்கை உருவாக்கவும் - Create Account” பொத்தானைக் கிளிக் செய்யவும்.



4. **இணையதளத்தில் உள்நுழைதல்**

- **மின்னஞ்சல்** (Email): **பதிவு செய்த உங்கள் மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும்**.
- **கடவுச்சொல்** (Password): **உங்கள் கடவுச்சொல்லை உள்ளிடவும்**.
- **சமர்ப்பித்தல்** (Submit): **நீல நிற** “**உள்நுழையவும்** - Log In” **பொத்தானைக் கிளிக் செய்யவும்**.



5. விற்பனையாளர் கட்டுப்பாட்டுப் பலகை கண்ணோட்டம்

வெற்றிகரமாக உள்நுழைந்ததும், பின்வரும் பிரிவுகளைக் கொண்ட பிரதான கட்டுப்பாட்டுப் பலகையை காண்பீர்கள்.

- மேல் பட்டி (Top Bar): TRCSL சின்னம், கட்டுப்பாட்டுப் பலகை தலைப்பு மற்றும் பயனர் சுயவிவர கீழிறங்குப் பட்டியல்.
- பக்கப்பட்டி பட்டியல் (Sidebar Menu) :
    - விற்பனையாளர் உரிம விண்ணப்பம்
    - மாதிரி அங்கீகாரம்
    - இறக்குமதி அனுமதி
    - சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் (IMEI) பதிவேற்றம்
    - வரிசை எண் பதிவேற்றம்
    - மறு ஏற்றுமதி
    - பதிவிறக்க மையம்
    - பயனர் சுயவிவரம்
    - உதவி
- பிரதான பதாகை :



## 6. விற்பனையாளர் உரிமத்திற்கான விண்ணப்பம்

படிமுறை 1: விண்ணப்பப் பகுதிக்குச் செல்லுதல்

- பக்கப்பட்டி பட்டியலில் “விற்பனையாளர் உரிம விண்ணப்பம்” என்பதைக் கிளிக் செய்யவும்.




பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கான அட்டவணையுடன் பக்கம் திறக்கும். (புதிய பயனர்களுக்கு இந்த அட்டவணை ஆரம்பத்தில் வெற்றிடமாக காணப்படும்)

படிமுறை 2:

புதிய பயனராக, புதிய விண்ணப்பத்தைத் தொடங்க **“Vendor License Request Form”** என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.



படிமுறை 3: விண்ணப்பப் படிவத்தை நிரப்புதல்

- தற்போது, கீழே காட்டப்பட்டுள்ள **"Application for Issue of Vendor License"** படிவத் திரையில் நீங்கள் இருக்கின்றீர்கள்.
- விற்பனையாளர் உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவத்திற்குப் பின்வரும் விபரங்கள் தேவைப்படுகின்றன.

பிரிவு 1: நிறுவன விபரங்கள்

- நிறுவனத்தின் பெயர்
- வியாபார பதிவு எண்
- பதிவு செய்யப்பட்ட வியாபார முகவரி
- தொலைபேசி



பிரிவு 2: தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் :

- தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் பெயர்
- பதவி
- கையடக்கத் தொலைபேசி எண்
- மின்னஞ்சல் முகவரி .

பிரிவு 3: விற்பனையாளர் உரிமம் தேவைப்படும் நோக்கம் / செயல்பாடு

- உங்கள் செயல்பாடுகளைக் குறிப்பிடுவதற்காக தொடர்புடைய தேர்வுப் பெட்டிகளைத் தேர்ந்தெடுக்கவும்:
  - உற்பத்தி
  - இறக்குமதி
  - கொள்வனவு செய்து கையாளுதல், விற்பனை செய்தல், விற்பனைக்கு வழங்குதல்
  - செயல்விளக்கம் அளித்தல், உரிமம்/உடைமை மாற்றம் செய்தல்



- பிரிவு 4: தேவையான வகை / வகைகளைத் தேர்ந்தெடுத்து குறியிடுதல்




பிரிவு 5: படிவத்தில் உள்ள “முகவரிகள்” பிரிவிற்குச் செல்லவும்.

கட்டங்களை நிரப்பவும்.

- வர்த்தக நிலையம் **(Trading Outlet):** பிரதான வணிக நிலையத்தின் முகவரியை உள்ளிடவும்.
- பராமரிப்பு / பழுதுபார்ப்பு நிலையம் (Maintenance/Repair Center): பராமரிப்பு அல்லது பழுதுபார்ப்பு சேவைகள் மேற்கொள்ளப்படும் இடத்தின் முகவரியை உள்ளிடவும்.
- களஞ்சியம் / கிடங்கு **(Stores/Warehouse):** பொருட்கள் சேமித்து வைக்கப்படும் இடத்தின் முகவரியை உள்ளிடவும்.


TRCSL - Home
ecs.trc.gov.lk/vendor-license/registration
TRCSL
Others (please specify):
5. Addresses of:
Trading Outlet
25/4 Vajira Road, Colombo 04
Maintenance/Repair Centre
12 Station Road, Colombo
Stores/Warehouse
6. Arrangements for Maintenance, Repair, and After-Sales Service
Professional and Technical Staff
Name
Academic Qualification
Issuing Authority
Experience
Save Table Data

பிரிவு 6: பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சேவைக்கான ஏற்பாடுகளை உள்ளிடுதல்.

“பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சேவைக்கான ஏற்பாடுகள்” பிரிவிற்குச் செல்லவும்.

அட்டவணையை நிரப்புதல்:

- ஒவ்வொரு தொழில்முறை அல்லது தொழில்நுட்பப் பணியாளருக்கும் புதிய வரிசையைச் சேர்க்க, நீல நிற “+” பொத்தானைக் கிளிக் செய்யவும்.
    - பெயர் : முழுப் பெயரை உள்ளிடவும்.
    - கல்வித் தகைமை : கல்வித் தகைமையைக் குறிப்பிடவும்
    - வழங்கும் அமைப்பு: தகுதியை வழங்கிய நிறுவனம் அல்லது அமைப்பைக் குறிப்பிடவும்
    - அனுபவம்: தொடர்புடைய அனுபவத்தின் ஆண்டுகள் அல்லது விவரங்களை வழங்கவும்

- தரவைச் சேமித்தல் : உள்ளிடப்பட்ட விவரங்களைச் சேமிக்க “Save Table Data” பொத்தானைக் கிளிக் செய்யவும்.

- வரிசைகளை நீக்குதல் (Delete Rows): தேவையெனில், தவறாக உள்ளிடப்பட்ட விவரங்களை நீக்க சிவப்பு நிற “X” பொத்தானைப் பயன்படுத்தவும்.



பிரிவு 7: உறுதிமொழிகள்

- 'உறுதிமொழி' (Declaration) பகுதிக்குக் கீழே செல்லவும்.
- தேவையான விவரங்களை நிரப்பவும் :
  - விண்ணப்பதாரரின் பெயர்
  - பதவி
  - தொலைபேசி எண்
  - தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு எண்
  - திகதி
- பின்வருவனவற்றை பதிவேற்றவும்
  - கையொப்பம் (PNG அல்லது PDF, அதிகபட்ச அளவு 3 MB)
  - நிறுவனத்தின் முத்திரை (PNG அல்லது PDF, அதிகபட்ச அளவு 3 MB)
- அனைத்து விவரங்களும் கோப்புகளும் சரியாகப் பதிவேற்றப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்கவும் (கீழே காட்டப்பட்டுள்ளவாறு)




TRCSL - Home
ecs.trc.gov.lk/vendor-license/registration
TRCSL
telecommunication apparatus.
Name of Applicant
Sahanaka De Silva
Designation
Managing Director
Telephone Number
0715678414
NIC/Passport Number
668050047v
Date
2025-08-14
Signature
Add Signature
Choose File
No file chosen
View
Company Seal
Add Company Seal
Choose File
No file chosen
View
8. Documents required to be submitted for the application of Vendor License.
Documents submitted for the application of Vendor License should be .pdf format and file size not exceed 3MB.
Letter of request for Vendor Licence.


Open
Dharani - Personal
Documents
TRCSL - Vendor doc
Organize
New folder
Name
Status
Date modified
Type
Size
Certificate_of_Incorporation_(Copy).pdf
Certificates_of_Technical_Staff_(Copy).pdf
Defence_Clearance_Document.pdf
Letter_of_Request_for_Vendor_Licence.pdf
S De Silva.png
Sample_Bank_Payment_Details.pdf
signature.png
Stamp.png
Vendor_License_Request.pdf
Workshop_Inspection_Notice.pdf
File name:
S De Silva.png
Open
Cancel

பிரிவு 8: விற்பனையாளர் உரிமத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

- 'தேவையான ஆவணங்கள்' (Documents required) பகுதிக்குக் கீழே செல்லவும்.
- குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைப் பதிவேற்றவும்
- ஒவ்வொரு ஆவணத்தையும் PDF வடிவில் (அதிகபட்ச அளவு 3 MB) தயாரிக்கவும்.
- பதிவேற்றிய பிறகு, ஒவ்வொரு கோப்பும் சரியாகப் பதிவேற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும்; பின்னர் 'சேமி' (Save) செய்து, சமர்ப்பிக்கும் அடுத்த கட்டத்திற்குச் செல்லவும்.







Open
Dharani - Personal > Documents > TRCSL - Vendor doc
Search TRCSL - Vendor doc
Organize
New folder
Name
Status
Date modified
Type
Size
Additional_TRCSL_Documents_(for_GPS_...
Certificate_of_Incorporation_(Copy).pdf
Certificates_of_Technical_Staff_(Copy).pdf
Confirmation_Letter_from_Local_Supplier...
Defence_Clearance_Document.pdf
DTH_Satellite_Broadcasting_Service_Syst...
Form_20_or_Business_Registration_and_N...
Letter_of_Request_for_Vendor_Licence.pdf
Memorandum_and_Articles_of_Associati...
National_Identity_Card_of_Directors-Own...
Sample_Bank_Payment_Details.pdf
Technical_Specifications_of_the_Telecom...
Vendor_License_Request.pdf
Workshop_Inspection_Notice.pdf
File name: Letter_of_Request_for_Vendor_Licence.pdf
PDF File (*.pdf)
Cancel

## 7. மாதிரி அங்கீகார செயல்முறை

படிமுறை 1: 'Type Approval' (மாதிரி அங்கீகாரம்) பகுதியை அணுகுதல்

- இடதுபுற வழிசெலுத்தல் பட்டியலில் உள்ள "Type Approval" பிரிவிற்குச் செல்லவும்.




- "Type Approval" (மாதிரி அங்கீகாரம்) என்பதைக் கிளிக் செய்வதன் மூலம், வகை அங்கீகாரக் கோரிக்கையின் வகையை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்; இதில், Type Approval -> Standard (வகை அங்கீகாரம் -> தரநிலை) என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.



படிமுறை 2: புதிய தரநிலை மாதிரி அங்கீகாரக் கோரிக்கையைச் சேர்த்தல்

- புதிய விண்ணப்பத்தைத் தொடங்க, "Add New Type" (புதிய மாதிரி சேர்) பொத்தானைக் கிளிக் செய்யவும்.




- காணப்படும் தேடல் பெட்டியில் சாதனத்தின் மாதிரி எண்ணை (model number) உள்ளிட்டுத் தேடவும்.
- ஏற்கனவே ஏதேனும் கோரிக்கை உள்ளதா என்பதைச் சரிபார்க்க, சாதனத்தின் மாதிரி எண்ணை உள்ளிடவும்.




- தேடப்பட்ட மாதிரி எண் இதுவரை கோரிக்கை சமர்ப்பிக்கப்படாத புதிய மாதிரி எண்ணாக இருந்தால், கீழே காட்டப்பட்டுள்ளவாறு அது தோன்றும். பின்னர், பச்சை நிற “புதிய கோரிக்கையை உருவாக்கவும் - Create New Request” பொத்தானைக் கிளிக் செய்யவும்.




படிமுறை 3: விண்ணப்பதாரர் விபரங்களை நிரப்புதல் (பிரிவு 1 - A, B)

- பின்வருமாறு விண்ணப்பதாரர் விபரங்களை நிரப்பவும்
    - விண்ணப்பதாரர் வகை : பொருத்தமான தேர்வுப் பெட்டியைத் தேர்ந்தெடுக்கவும். உதாரணமாக, விற்பனையாளர் உரிமம் வைத்திருப்பவர் அல்லது புதிய விண்ணப்பம்.
    - நீங்கள் விரைவு வழிமுறை (fast track) அல்லது சாதாரண வழிமுறையைத் (normal track) தேர்ந்தெடுக்கலாம்.
    - நிறுவனம்/விண்ணப்பதாரரின் பெயர்
    - வணிகப் பதிவு எண்
    - அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் பெயர்
    - பிரதிநிதியின் தேசிய அடையாள அட்டை எண்
    - விற்பனையாளர் உரிமக் கோப்பு எண்
    - விண்ணப்பதாரரின் முகவரி
    - தொலைபேசி எண்
    - தொலைநகல் எண் (இருப்பின்)
    - மின்னஞ்சல் முகவரி
- விவரங்களை நிரப்பிய பிறகு, அடுத்த கட்டத்திற்குச் செல்ல 'Next' என்பதைக் கிளிக் செய்யவும்


TRCSL
Dashboard / Type Approval Request Portal / Standard Type Approval Request Step-1
Standard Type Approval Request step-1
Section 1
Section 2
Section 3
Section 4
Section 5
A. Category of the Applicant (tick appropriate)
Vendors License Holder*
New Application*
Fast Track*
Fast
Normal
B. Details of Applicant
Name of Company/Applicant
Dinesh Perera
Business Registration Number
PV00234567
Name of Authorised Representative
Dinesh Perera


TRCSL
Dashboard / Type Approval Request Portal / Standard Type Approval Request Step-1
Standard Type Approval Request step-1
Section 1
Section 2
Section 3
Section 4
Section 5
A. Category of the Applicant (tick appropriate)
Vendors License Holder*
New Application*
Fast Track*
Fast
Normal
B. Details of Applicant
Name of Company/Applicant
Dinesh Perera
Business Registration Number
PV00234567
Name of Authorised Representative
Dinesh Perera
NIC Number




படிமுறை 4: வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணம் (RTTE) தகவலை வழங்கவும் (பிரிவு 2 - C)

- TAC எண்ணை உள்ளிட்டு, கீழே காட்டப்பட்டுள்ள நீல நிற “தரவைத் தேடவும் - Find Data” பொத்தானைக் கிளிக் செய்யவும்.






- TAC எண்ணை உள்ளிட்டு ' தரவைத் தேடவும் - Find Data' என்பதைக் கிளிக் செய்த பிறகு, அந்த எண்ணின் அடிப்படையில் சில விவரங்கள் தானாகவே பெறப்படும். மீதமுள்ள விவரங்களை மட்டும் நீங்கள் நேரடியாகப் பூர்த்தி செய்தால் போதுமானது.






படிமுறை 4: உற்பத்தியாளர் விவரங்கள் (பிரிவு 2 - D)

- உற்பத்தியாளரின் பின்வரும் விபரங்களை அளித்து, "அடுத்து- Next" பட்டனை கிளிக் செய்யவும்.
  - நிறுவனத்தின் பெயர்
  - தொடர்பு கொள்ள வேண்டிய நபர்
  - முகவரி
  - தொலைபேசி
  - தொலைநகல்
  - மின்னஞ்சல்



படிமுறை 5: வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணம் (RTTE) யின் வகை (பிரிவு 3)

- பொருத்தமான விபரங்களைத் தேர்ந்தெடுத்து, தொடர்வதற்கு “அடுத்து- Next” பட்டனை கிளிக் செய்யவும்




படிமுறை 6: வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணம் (RTTE) இன் தொழில்நுட்ப விபரக்குறிப்பு (பிரிவு 4)

- சாதனங்கள் தொடர்பான கேட்கப்பட்ட விபரங்களை நிரப்பி, அடுத்த கட்டத்திற்குச் செல்ல “அடுத்து - Next” பட்டனை கிளிக் செய்யவும்.



படிமுறை 7: 5 G பிரிவு - பரிசோதனை அறிக்கை (Test Report)

- 'பரிசோதனை அறிக்கை' (Test Report) பிரிவின் கீழ் திரையில் காட்டப்பட்டுள்ள தேவையான விபரங்களை நிரப்பி, கீழே நகர்த்தவும் (scroll).

H. இணக்கத்தன்மைக்கான உறுதிமொழி (Declaration of Conformity)

- தொடர்புடைய விபரங்களை உள்ளிட்டு, பிரிவு "I"-க்குச் செல்லவும்.
- உறுதிமொழி வாசகத்தைப் படித்து, உறுதிப்படுத்தலுக்கான கட்டத்தில் (checkbox) டிக் (tick) செய்யவும்.
- திகதிப் பகுதி: இது முறைமையால் (system) தானாகவே பெறப்படுகிறது. இதை உங்களால் மாற்ற முடியாது.
- பின்னர் கீழுள்ள பகுதிக்கு நகர்த்தவும்.



துணை ஆவணங்கள் மற்றும் பிரதிநிதி மாதிரி

- தேவையான ஆவணங்களை இங்கே இணைக்கப்பட வேண்டும். கட்டாயமான அனைத்து ஆவணங்களும் இணைக்கப்படும் வரை சமர்ப்பிக்கும் செயல்முறை முடக்கத்தில் இருக்கும்.
- உங்கள் சாதனத்தில் உள்ள தொடர்புடைய கோப்புகளைத் தேர்ந்தெடுத்து, உரிய பிரிவில் அவற்றை இணைக்கலாம்.
- ஒவ்வொரு இணைப்பும் **PDF/PNG** வடிவில் இருக்க வேண்டும். கோப்பின் அளவு **10** MB-ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

1. தொழில்நுட்ப கட்டமைப்பு கோப்பு 5 பகுதிகளைக் கொண்டது.
    - பகுதி a – கட்டாயம்
    - பகுதி b – பொருந்துமாயின் இணைக்கவும்.
    - பகுதி c – பொருந்துமாயின் இணைக்கவும்.
    - பகுதி d – பொருந்துமாயின் இணைக்கவும்.
    - பகுதி e – கட்டாயம்
2. மொபைல் சாதனங்களுக்கான GSMA-வின் அங்கீகரிக்கப்பட்ட TAC-க்கான சான்று - கட்டாயம்
3. பொருந்தக்கூடிய 'மாதிரி அங்கீகாரக் கட்டணங்கள்' (Type Approval Fees) செலுத்தப்பட்டதற்கான சான்று - கட்டாயமானது
    - கட்டணம் செலுத்திய திகதியைத் தேர்ந்தெடுக்கவும் (திகதித் தேர்வி (date picker) மூலம்).
4. பிற ஆவணங்கள் (பொருந்தினால்) வேறு ஏதேனும் ஆவணங்கள் - Any Other Documents (if applicable)
    - கோப்பின் வகையைக் குறிப்பிடுவதுடன், அந்த ஆவணம் தொடர்பான சுருக்கமான விளக்கத்தையும் வழங்கவும்.






- இறுதிச் சரிபார்ப்புகள் மற்றும் சமர்ப்பித்தல்






- வெற்றிகரமாகச் சமர்ப்பித்த பின்னர், கீழே காட்டப்பட்டுள்ள திரையை நீங்கள் காணலாம்.




- நீல நிற “உங்கள் நிலையைச் சரிபார்க்கவும் - Check Your Status” பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம், நீங்கள் தரநிலை மாதிரி அங்கீகாரக் கோரிக்கை இணையதளத்திற்கு வழிநடத்தப்படுவீர்கள். அங்கு, கீழே காட்டப்பட்டுள்ள திரைகளைப் போன்று, உங்கள் கோரிக்கையின் நிலையைப் பார்க்கலாம்.


TRCSL - Home
Inbox - auradotqatest@gmail.c
ecs.trc.gov.lk/type-approval-request/success/d1106eae-2a48-4b47-a7aa-389a6432241c
TRCSL
Techno Pvt. Ltd
Dashboard / Success
Dashboard
Vendor License Application
Type Approval
Standard
Standard Without IMEI
Simplified
Simplified Without IMEI
Import Clearance
IMEI Upload
Serial Number Upload
Re-Export
Download Center
User Profile
Help
Thanks for submitting!
Your standard type approval request is successfully submitted.
The Completion time for the request is 30 Working Days.
CHECK YOUR STATUS
Download submitted form details
https://ecs.trc.gov.lk/type-approval-request/type-request-portal


TRCSL - Home
Inbox - auradotqatest@gmail.c
ecs.trc.gov.lk/type-approval-request/type-request-portal
TRCSL
Techno Pvt. Ltd
Dashboard / Standard Type Approval Request Portal
Standard Type Approval Request Portal
Add New
View RTTE Gazette
Type Approval Request Portal
Show 10 entries
Search:
Ref number
Requested date and time
Brand Name
Process
Status
Requesting Change
Action
Tentative Completion Date
Approval Status
Download Letter
ECS-TAA-V-20250812-244
2025-08-12 16:45:32
XIAOMI
NORMAL
SUBMIT
No
IN_REVIEW
Showing 1 to 1 of 1 entries
Previous 1 Next
The completion date is subject to change based on conditions outside the scope of TRCSL.
Dashboard
Vendor License Application
Type Approval
Standard
Standard Without IMEI
Simplified
Simplified Without IMEI
Import Clearance
IMEI Upload
Serial Number Upload
Re-Export
Download Center
User Profile
Help

## 8. இறக்குமதி அனுமதி (ICL) செயல்முறை

### படிமுறை 1: இறக்குமதி அனுமதி (Import Clearance) பிரிவை அணுகுதல்

- இடதுபுற வழிசெலுத்தல் பட்டியலில் (Left-hand Navigation Menu) உள்ள “இறக்குமதி அனுமதி - Import Clearance” பிரிவிற்குச் செல்லவும்.
- பின்னர், இறக்குமதி அனுமதி >> பிரதிநிதி மாதிரி பகுதிக்குச் செல்லவும்.




- “பிரதிநிதி மாதிரி - **Representative Sample**” என்பதைக் கிளிக் செய்வதன் மூலம், கீழே காட்டப்பட்டுள்ள திரைக்கு நீங்கள் செல்வீர்கள்.
- கோரப்பட்ட தொடர்புடைய விபரங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
- உங்கள் நிறுவனத்தின் விபரங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் விபரங்களைப் பூர்த்தி செய்யவும்.






- வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணம் (RTTE) விபரங்களை உள்ளிடவும் - உற்பத்தியாளர், மாதிரி, விலைப்பட்டியல் (Invoice) எண்/திகதி, அதிர்வெண் உரிமம் (Frequency License) (இருப்பின்), மேலும் அதில் IMEI உள்ளதா என்பதையும் குறிப்பிடவும்.



- "உபகரணத்தைச் சேர்க்கவும் - Add Equipment" என்பதைக் கிளிக் செய்து, உபகரணத்தின் விபரங்களைப் பூர்த்தி செய்யவும் (வகை, தயாரிப்பு நிறுவனம், மாதிரி, அதிர்வெண், வலு, அளவு - அதிகபட்சம் 2 அலகுகள், விலை, செலவு)
- உபகரண விபரங்களைப் பூர்த்தி செய்த பின்னர், உபகரணத்தைச் சேர்ப்பதற்கு "சேர்க்கவும் - Add" பொத்தானைக் கிளிக் செய்யவும்.






- துணை ஆவணங்களைப் பதிவேற்றம் செய்யவும். (வேண்டுகோள் கடிதம், முன்வடிவ விலைப்பட்டியல் (Proforma Invoice), விற்பனையாளர் உரிமம், தொழில்நுட்ப விபரக்குறிப்புகள் மற்றும் தேவையான பிற ஆவணங்கள்).




- உறுதிமொழியை வாசித்து ஏற்றுக்கொண்ட பின்னர், “சமர்ப்பிக்கவும் - Submit” என்பதைக் கிளிக் செய்து உறுதிப்படுத்தவும்.






- சமர்ப்பித்த பின்னர், உங்களால் உறுதிப்படுத்தல் பக்கத்தை பார்க்க முடியும். நீல நிற "உங்கள் நிலையைச் சரிபார்க்கவும் - Check Your Status" பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம், கீழே காட்டப்பட்டுள்ள திரைகளைப் போன்று, உங்கள் கோரிக்கையின் நிலையைப் பார்வையிடலாம்.




TRCSL - Home
ecs.trc.gov.lk/permit-approval-request/representative-sample
TRCSL
Application for a Permit to Import Representative Sample(s) of RTTE for Type Approval
Add New Permit
Dashboard
Vendor License Application
Type Approval
Import Clearance
Representative Sample
IMEI Upload
Serial Number Upload
Re-Export
Download Center
User Profile
Help
Ref number
Company/applicant
Requested date
NIC
Mobile
Requesting Change
IMEI
Status
Action
Approval Status
Download Letter
Sahanaka De Silva
2025-08-25
No
Yes
SUBMIT
IN_REVIEW
Previous
Next
The completion date is subject to change based on conditions outside the scope of TRCSL.

9. சுங்க அனுமதி (CCL) செயல்முறை

படிமுறை 1: இறக்குமதி அனுமதி (Import Clearance) பிரிவை அணுகுதல்

- பட்டியலில் உள்ள “சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண்பதிவேற்றவும் - **IMEI Upload”** பிரிவிற்குச் செல்லவும்.
- பின்னர், சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண்பதிவேற்றவும் → மாதிரி நோக்கம் - சுங்க அனுமதி (CCL) மட்டும் பகுதிக்குச் செல்லவும்.
- “மாதிரி நோக்கம் - சுங்க அனுமதி (CCL)” என்பதைக் கிளிக் செய்வதன் மூலம், கீழே காட்டப்பட்டுள்ள திரைக்கு நீங்கள் செல்வீர்கள்.




- மேலே காட்டப்பட்டுள்ள பக்கத்தில் “புதியதைச் சேர்க்கவும் - Add New” பொத்தானைக் கிளிக் செய்யவும்.
- பயனர் விபரங்கள் மற்றும் விலைப்பட்டியல் (Invoice) விபரங்களுடன் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யவும்.

படிமுறை 2: விற்பனையாளர் பயனருக்கான சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் (IMEI) பதிவேற்றம்




- கீழே காட்டப்பட்டுள்ளதன் படி, திகதி தேர்விலிருந்து (**Date Picker**) முன்வடிவ பட்டியல் (Proforma Invoice) திகதியையும், வணிகப் பட்டியல் (**Commercial Invoice**) திகதியையும் தேர்ந்தெடுக்கவும்.






- கீழ்நோக்கி சென்று, “சாதன அட்டவணை - சாதன அட்டவணை Device Table” பிரிவின் கீழ் சாதனத்தின் மாதிரியை (Device Model) சேர்க்க வேண்டும்.
- நீல நிற “சாதன மாதிரியைச் சேர்க்கவும் - Add Device Model” பொத்தானைக் கிளிக் செய்யவும்.



- பின்னர், கோரப்பட்ட விபரங்களைப் பூர்த்தி செய்து, சாதன மாதிரி விபரங்களைச் சேமிப்பதற்காக **“Add Device Model”** பொத்தானைக் கிளிக் செய்யவும். கீழே காட்டப்பட்டுள்ள திரையைப் பார்க்கவும்.




- பின்னர், உங்கள் கணினியிலிருந்து **Device IMEI List** பிரிவின் கீழ் உள்ள **IMEI CSV** கோப்பைத் தேர்ந்தெடுத்து பதிவேற்றவும்.
- திரையில் கீழே காணப்படும் **“Submit”** பொத்தானைக் கிளிக் செய்யவும்.






- பின்னர், சமர்ப்பித்தலை நிறைவு செய்வதற்கு **“Yes”** என்பதைத் தேர்ந்தெடுத்து தொடரவும்.




- சமர்ப்பித்த பின்னர், கீழே காட்டப்பட்டுள்ள உறுதிப்படுத்தல் பக்கத்தை நீங்கள் காணலாம்.




படிமுறை 3: சுங்க அனுமதியை உருவாக்குதல் (CCL)

- IMEI-ஐ பதிவேற்றிய பின்னர்.
- உறுதிப்படுத்தல் பக்கத்தில் (**Confirmation Page**) உள்ள **"Check Your Status"** பொத்தானைக் கிளிக் செய்யவும்.
- கீழே காட்டப்பட்டுள்ள திரைக்கு அது உங்களை வழிநடத்தும்.
- பின்னர் **"Create CCL"** என்பதைக் கிளிக் செய்யவும்.




- **"Create CCL"** என்பதைக் கிளிக் செய்வதன் மூலம், கீழே காட்டப்பட்டுள்ள திரைக்கு நீங்கள் நேரடியாக செல்வீர்கள்.
- பின்னர், கோரப்பட்ட விபரங்களுடன் படிவத்தைப் பூர்த்தி செய்யவும்.







- **RTTE விவரங்கள்** பிரிவின் கீழ், **"Add Equipment"** என்பதைக் கிளிக் செய்து, சாதனத்தின் விபரங்களைப் பூர்த்தி செய்யவும்.
- சாதன விபரங்களைப் பூர்த்தி செய்த பின்னர் சாதனத்தைச் சேர்ப்பதற்கு **"Add"** பொத்தானைக் கிளிக் செய்யவும்.







- பின்னர், **“Other Details”** பிரிவில் தேவையான விபரங்களைப் பூர்த்தி செய்யவும்.
- அதன் பின்னர், **“Declaration”** பிரிவின் கீழ், **“I hereby accept the above declaration.”** என்பதற்கு அருகிலுள்ள பெட்டியைத் தேர்ந்தெடுக்கவும். தற்போதைய திகதி **“Date”** புலத்தில் தானாகவே தோன்றும்.




- **"Supporting Documentations"** பிரிவின் கீழ், தேவையான ஆவணங்களைப் பதிவேற்றுவதற்கு **"Choose File"** என்பதைக் கிளிக் செய்யவும்.
- இறுதியாக, உங்கள் விண்ணப்பத்தை நிறைவு செய்வதற்கு **"Submit"** பொத்தானைக் கிளிக் செய்து, பின்னர் **"Yes"** பொத்தானைக் கிளிக் செய்யவும்.






- சமர்ப்பித்த பின்னர், உறுதிப்படுத்தல் பக்கத்தை (**Confirmation Page**) நீங்கள் காண்பீர்கள்.

## 10. மறு- ஏற்றுமதி விண்ணப்ப செயல்முறை

### படிமுறை 1: மறு- -ஏற்றுமதி (Re-Export) பிரிவை அணுகுதல்

- இடதுபுற வழிசெலுத்தல் பட்டியலில் (**Left-hand Navigation Menu**) உள்ள **"Re-Export"** பிரிவிற்குச் செல்லவும்.




- **"Re-Export"** பிரிவைக் கிளிக் செய்வதன் மூலம், கீழே காட்டப்பட்டுள்ள திரைக்கு நீங்கள் செல்வீர்கள்.
- கீழே காட்டப்பட்டுள்ள பக்கத்தில் **"Add New"** பொத்தானைக் கிளிக் செய்யவும்.




- முதல் பிரிவில் உங்களுடைய நிறுவனத்தின் விபரங்களைப் பார்வையிடலாம்.

- கீழ்நோக்கி சென்று, நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் (**Authorized Representative**) தொடர்பு விபரங்களுடன் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யவும்.




- கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி,
  - RTTE **விபரங்கள்** (Details of RTTE) பிரிவில், சாதனத்தின் IMEI **நிலை** "With IMEI" அல்லது "Without IMEI" என்பதில் பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்கவும்.
  - "Choose File" பொத்தானைக் கிளிக் செய்து, உங்கள் கணினியிலிருந்து RTTE **வரிசை எண்** (Serial Number) மற்றும் IMEI **எண்** பட்டியலைக் கொண்ட CSV கோப்பைத் தேர்ந்தெடுக்கவும்.






- பின்னர், கீழே காட்டப்பட்டுள்ள திரையில்,
    - சுங்க அனுமதிக்கான **ஆட்சேபனை இல்லை என்ற கடிதத்தின்** (**No Objection Letter**) குறிப்பு எண்ணை (**Reference Number**) உள்ளிடவும்.
    - RTTE நிறுவப்பட்டுள்ள இடங்களை உள்ளிடவும்.
    - பொருந்துமாயின், **அதிர்வெண் உரிம எண்** (**Frequency License Number**)-ஐ உள்ளிடவும்.




- பின்னர், **"Declaration"** பிரிவின் கீழ், **"I hereby accept the above declaration."** என்பதற்கு அருகிலுள்ள பெட்டியைத் தேர்ந்தெடுக்கவும். தற்போதைய திகதி **Date** புலத்தில் தானாகவே தோன்றும்.




- **"Supporting Documentations"** பிரிவின் கீழ், தேவையான ஆவணங்களை உங்கள் கணினியிலிருந்து பதிவேற்றுவதற்கு **"NIC of the Applicant"** மற்றும் **"No Objection Letter for Custom Clearance issued by the Commission"** ஆகிய பிரிவுகளில் உள்ள **"Choose File"** பொத்தானைக் கிளிக் செய்யவும். கீழே காட்டப்பட்டுள்ளபடி ஆவணங்களைப் பதிவேற்றவும்.






- இறுதியாக, கீழே காட்டப்பட்டுள்ளதன் படி, உங்கள் விண்ணப்பத்தை நிறைவு செய்வதற்கு **“Submit”** பொத்தானைக் கிளிக் செய்யவும்.






- சமர்ப்பித்த பின்னர், உறுதிப்படுத்தல் பக்கத்தை (**Confirmation Page**) நீங்கள் காணலாம். நீல நிற **“Check Your Status”** பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம், கீழே காட்டப்பட்டுள்ள திரைகளைப் போன்று, உங்களால் கோரிக்கையின் நிலையைப் பார்வையிடலாம்.




TRCSL - Home
ecs.trc.gov.lk/reExport/reExport-table
TRCSL
Dashboard
Vendor License Application
Type Approval
Import Clearance
IMEI Upload
Serial Number Upload
Re-Export
Download Center
User Profile
Help
Permission to Re-export RTTE
Add New
Permission to Re-export RTTE
Show 10 entries
Search:
Reference Number
Requested Date
Company Name
Business Reg. No
Contact
Requesting Change
IMEI
Request Status
Workflow Status
Action
Download Letter
ECS-RCL-V-20250825-51
2025-08-25
Sahanaka De Silva
PV00234567
0715678414
No
Yes
SUBMIT
IN_REVIEW
Showing 1 to 1 of 1 entries
Previous
1
Next
The completion date is subject to change based on conditions outside the scope of TRCSL.